DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

PRC. No. 01 /2024 PW . 1

பெயர் : காளிதாசன் **தந்தை/கணவர் பெயர்: ராஜேந்திரன்**

ஊர் : **தாலுகா:**

வயது : **தொழில்:**

ஜாதி : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.06.2025

(எதிரி தலைமறைவு குற்றவாளி என்பதால் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட குற்றவாளியாக அறிவிக்கை செய்யப்பட்ட பின்னர் குவிமுச 299-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரி முன்னிலையாகாமல் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்).

26.06.2025 முதல் விசாரணை:

1. நான் தற்போது மதுரையில் குடியிருக்கிறேன். நான் இதற்கு முன்னர் திண்டுக்கல் மாவட்டம், நத்ததில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். தற்போது முதுநிலை வரைவாளராக கள்ளிக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றுகிறேன். 10.02.2016ம் தேதி நான் நத்தம் தாலுகா சேத்தூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது காலை சுமார் 11 மணிக்கு கிராம உதவியாளர் சந்தான லெட்சுமி என்னிடம் கன்னிமார்புரத்தின் வடக்கில் சுமார் அரைகி.மீ தூரத்தில் பூக்காரக்கல் ஓடையில் உள்ள ஒத்தக்கண் பாலத்திற்கு அருகில் பிளாஸ்டிக் ட்ரம்மில் ஒரு மனித உடல் இருப்பதாக என்னிடம் தகவல் சொன்னார். நானும், சந்தானலெட்சுமியும் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு போலீசார் உதவியுடன் பிளாஸ்டிக் ட்ரம்மை திறந்து பார்த்த போது தலையில்லாமல் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் பிணம் ஒன்று இருந்தது. அந்த ட்ரம்மில் தலை ஒரு பிளாஸ்டிக் பையில் தனியாக இருந்தது. கை, கால்கள் ட்ரம்மில் இல்லை. அதிலே ப்ரவுன்கலர் சட்டை, ஒரு வேஸ்டி, ஒரு சரிகை துண்டு முதலானவை இருந்தது. உடலின் மீது உப்பை கொட்டி வைத்திருந்தார்கள். இது சம்பந்தமாக நான் நத்தம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண். 57/2016 வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நத்தம் காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார்தான். அதில் உள்ளது எனது கையொப்பம் ஆகும். **மேற்படி புகார் மனு அ.த.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சான்று பொருட்கள் குறியீடு செய்வதற்காக அரசு தரப்பில் வேண்டுக்கோளுக்கிணங்க முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது,